நீலகிரி மாவட்ட நலத்திட்டங்கள் குறித்த

# ஐ.வி.டி.பி. சிறப்பு மலர்

INTEGRATED VILLAGE DEVELOPMENT PROJECT
I.V.D.P
TOWARDS TRANSFORMATION • மாற்றத்தை நோக்கி
(Regd. No. 69/79)

• மார்ச் 2021 (தனிச்சுற்றுக்கு மட்டும்)




ஐ.வி.டி.பி. தலைவர் அவர்களை நினைவு பரிசு வழங்கி பாராட்டும்
நீலகிரி மாவட்ட ஆட்சியர் திருமதி. **இன்னசென்ட் திவ்யா**, இ.ஆ.ப.

## நீலகிரி மாவட்ட குழந்தைகளுக்காக

# ₹ 1.11 கோடி மதிப்பில்

## நிறைவேற்றப்பட்ட நலத்திட்டங்கள்

## இயக்குநர் இதயத்திலிருந்து...

அன்பார்ந்த சுய உதவிக்குழு உறுப்பினர்களுக்கு!

# வாழ்த்துகளும்! வணக்கங்களும்!!

நீலகிரி மாவட்டத்திற்கு ஐ.வி.டி.பி. நிறுவனம் வழங்கிய திட்டங்கள் குறித்த இச்சிறப்பு மலர் வாயிலாக உங்களை சந்திப்பதில் பெருமகிழ்ச்சியடைகிறேன். கடந்த காலங்களில் எப்போதெல்லாம் நாட்டின் பல பகுதிகளில் மழை, வெள்ளம், சுனாமி, நிலநடுக்கம் போன்ற பேரிடர் சூழ்நிலைகள் ஏற்படுகிறதோ, அப்போதெல்லாம், எனது வேண்டுகோளையேற்று, ஐ.வி.டி.பி. மகளிர் சுய உதவிக் குழு உறுப்பினர்களாகிய நீங்கள் மனமுவந்து தங்கள் பங்களிப்பை வழங்கி வந்துள்ளீர்கள். அதேபோல் தற்போதும் மலைப்பாங்கான, அடிக்கடி மழை வெள்ளம், நிலச்சரிவினால் பாதிக்கப்படும் நீலகிரி மாவட்டத்தில் 2019 ஆம் ஆண்டு ஏற்பட்ட வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவ நீங்கள் முன்வந்தீர்கள். ''சிறுதுளி பெரு வெள்ளம்'' என்பது போல நீங்கள் ஒவ்வொருவரும் வழங்கிய சிறுதொகை ஒருங்கிணைந்து மாபெரும் தொகையாக உருவெடுத்தது. **ஆம் ரூ. 95 இலட்சத்தை நம்மால் திரட்ட முடிந்தது.** அத்தொகையை கொண்டு நீலகிரி மாவட்ட ஆட்சியரை தொடர்பு கொண்டு அம்மாவட்ட மக்களின் தேவையை அறிந்து பல்வேறு பணிகளை முன்னெடுத்தோம்.

அவ்வகையில் மிகவும் பழுதடைந்த ஐந்து குழந்தைகள் மையத்தை அகற்றிவிட்டு புதிய குழந்தைகள் மையங்களையும், ஆதிதிராவிடர், பழங்குடியின மாணவர்கள் தங்கி பயிலும் விடுதிகளுக்கு கட்டில், மெத்தைகள் எனவும், மழையால் பாதிக்கப்பட்டு, முகாமில் தங்கியிருந்த மக்களுக்கு மண்ணெண்ணை அடுப்புகள் மற்றும் தார்பாய்கள் என **ரூ. 1 கோடியே 11 இலட்சம்** மதிப்பிலான பணிகளை நிறைவேற்றி, நீலகிரி மாவட்ட மக்களின் பயன்பாட்டிற்காக வழங்கியுள்ளோம்.

நீங்கள் வழங்கிய **ரூ. 95 இலட்சத்தோடு, ஐ.வி.டி.பி. நிதியான ரூ. 16 இலட்சத்தையும் சேர்ந்து ரூ. 1.11 கோடியில்** இப்பணிகள் அனைத்தையும் நிறைவு செய்து கடந்த 19.02.2021 அன்று நீலகிரி மாவட்ட ஆட்சியரிடம் நேரில் சென்று வழங்கினோம். அவற்றைப் பெற்றுக்கொண்ட ஆட்சியர், உங்கள் அனைவருக்கும் நீலகிரி மாவட்ட குழந்தைகள், மக்கள் சார்பில் தனது மனமார்ந்த நன்றியை உரித்தாக்கிக் கொண்டார்.

இவ்வாறு தொலைதூரத்தில் நாம் நிறைவேற்றிய பணிகளை நீங்கள் அனைவரும் சென்று காண இயலா சூழலில் அவற்றை இச்சிறப்பு மலர் வாயிலாக உங்களுக்கு தெரிவிப்பதில் மட்டற்ற மகிழ்ச்சியடைகிறேன். உங்களின் தொடர்ந்த ஆதரவை நாடும்,

என்றும் மக்கள் பணியில்...



**குழந்தை பிரான்சிஸ்**
நிறுவனர்/தலைவர்



## 1 திட்டம்

ஆதிதிராவிடர், பழங்குடியின
மாணவ – மாணவிகள் தங்கி பயிலும்

# ஈரடுக்கு கட்டில்கள் மற்றும் மெத்தைகள்



**380 ஈரடுக்கு கட்டில்கள்**
(760 குழந்தைகள் உறங்க இயலும்)

**740 கர்லான் மெத்தைகள்**

₹ 56 இலட்சம்













## ஈரடுக்கு கட்டில்கள் மற்றும் மெத்தைகள் வழங்கப்பட்ட விடுதிகள் மற்றும் பள்ளிகள் விபரம்

| S.No. | Name of the Hostel & Location | No. of COTS |
|---|---|---|
| 1 | ADW Polytechnic Hostel, Udhagai | 25 |
| 2 | ADW Boys Hostel, Udhagai | 9 |
| 3 | ADW Boys Hostel, Kil Kothagiri | 10 |
| 4 | ADW Girls Hostel, Udhagai | 20 |
| 5 | GOVT. Gtr Tribal College Girls Hostel, Udhagai | 20 |
| 6 | ADW Boys Hostel, Kathadimattam | 15 |
| 7 | ADW Boys Hostel, Manjoor | 25 |
| 8 | ADW Girls Hostel, Kothagiri | 25 |
| 9 | GTR High School, Devala | 75 |
| 10 | GTR Middle School, Aravenu | 20 |
| 11 | GTR Primary & High School, Karigaiyur | 36 |
| 12 | ADW Boys Hostel, Naduvattam | 30 |
| 13 | ADW Girls Hostel, Gudalur | 10 |
| 14 | ADW Girls Hostel, Ovelly | 5 |
| 15 | ADW Girls Hostel, Pandalur | 5 |
| 16 | ADW Boys Hostel, Ovelly | 12 |
| 17 | ADW Boys Hostel, Gudalur | 21 |
| 18 | ADW Boys Hostel, Pandalur | 17 |
| | TOTAL | 380 |

**740 கர்லான் மெத்தைகளும் மாவட்ட நிர்வாகத்தின் கட்டுப்பாட்டில் உள்ளன. பள்ளிகள் திறந்த உடன் அவை விடுதிகளுக்கும், பள்ளிகளுக்கு வழங்கப்படும்.**

**திட்டம் 1 : மொத்த மதிப்பு ₹ 56 இலட்சம்**

## 2 திட்டம்

நீலகிரி மாவட்டம்,
கூடலூர் ஒன்றியத்தில்
ஐந்து மழை, வெள்ளத்தால்
பழுதடைந்த குழந்தைகள் மைய
கட்டிடங்களை அகற்றிவிட்டு

# புதிய அங்கன்வாடி மையங்களை கட்டுதல்



▲ பழுதடைந்த நிலையில்
பாடன்தொரை குழந்தைகள் மையம்




▲ கட்டி முடிக்கப்பட்ட **புதிய மையம் - பாடன்தொரை**

திட்டம் 2 : மொத்த மதிப்பு **₹47.64 இலட்சம்**



பழுதடைந்த நிலையில்
புத்தூர்வயல் குழந்தைகள் மையம்



கட்டி முடிக்கப்பட்ட **புதிய மையம் - புத்தூர்வயல்**



▲ பழுதடைந்த நிலையில்
டாக்டர் அம்பேத்கர் காலனி குழந்தைகள் மையம்




▲ கட்டி முடிக்கப்பட்ட **புதிய மையம் - டாக்டர் அம்பேத்கர் காலனி**




▲ பழுதடைந்த நிலையில்
புளியம்பாறா குழந்தைகள் மையம்




▲ கட்டி முடிக்கப்பட்ட **புதிய மையம் - புளியம்பாறா**



பழுதடைந்த நிலையில்
நன்தட்டி குழந்தைகள் மையம்




கட்டி முடிக்கப்பட்ட **புதிய மையம் - நன்தட்டி**






கரும்பலகை ▲


## குழந்தைகள் புதிய மையங்கள் அமைந்துள்ள கிராமங்கள்

1. பாடன்தொரை
2. புத்தூர்வயல்
3. டாக்டர் அம்பேத்கர் காலணி (பந்தலூர்)
4. புலியம்பாறா
5. நன்தட்டி



▲ தரைவிதிப்பு, இரும்பு, அலமாறி, விளையாட்டு பொருட்கள், குக்கர், பாத்திரங்கள் வைக்கும் ஸ்டேண்ட், சில்வர் பாத்திரங்கள்





ICDS அலுவலகத்திற்கு ▲
வழங்கப்பட்ட அலமாரி




▲ சமையல் அறை




சின்டெக்ஸ் ▲
வாட்டர் டேங்



ICDS ▲
அலுவலகத்திற்கு
வழங்கப்பட்ட
அலமாரி



▲ ஓவியம் தீட்டப்பட்ட மையத்தின் உட்புற தோற்றம்






UVPC கதவுடன் கூடிய ▲
குழந்தைகள் கழிவறை



பொருள் வைப்பறை ▲



காலணிகள் ஸ்டேண்ட் ▲

## திட்ட மதிப்பீடு

| | |
|---|---|
| ஒரு மையத்திற்கான கட்டுமான செலவு | ₹ 8.87 இலட்சம் |
| ஐந்து குழந்தைகள் மையங்களுக்கான கட்டுமான செலவு | ₹ 44.35 இலட்சம் |
| ஐந்து மையங்களில் சுவர்களில் சுவரோவியம் வரைந்த செலவு | ₹ 1.15 இலட்சம் |
| விளையாட்டு பொருட்கள், தரை விரிப்பு, அலமாரிகள், வாட்டர் டேங்க், சில்வர் பாத்திரங்கள், குக்கர் வழங்கிய செலவு | ₹ 2.14 இலட்சம் |
| **திட்டம் 2 : மொத்த மதிப்பு** | **₹ 47.64 இலட்சம்** |



## திட்டம் 3

நீலகிரி மாவட்ட மக்களுக்கு வழங்கப்பட்ட

# வெள்ள நிவாரணப் பொருட்கள்




ஐ.வி.டி.வி. வழங்கிய நிவாரணப் பொருட்கள்
நீலகிரி மாவட்ட ஆட்சியர் அவர்களிடம் ஒப்படைக்கப்பட்டது.

**திட்டம் 3 : மொத்த மதிப்பு ₹7 இலட்சம்**





மக்களுக்கு மண்ணெண்ணெய் அடுப்புகள் வழங்கப்பட்ட போது



மக்களுக்கு தார்பாய்கள் வழங்கப்பட்ட போது

## திட்ட மதிப்பீடு

| | |
|---|---|
| 500 மண்ணெண்ணெய் அடுப்புகள் | ₹ 2 இலட்சம் |
| 500 தார்பாய்கள் | ₹ 5 இலட்சம் |
| **திட்டம் 3 : மொத்த மதிப்பு** | **₹ 7 இலட்சம்** |

## நீலகிரி மாவட்டத்தில் செயல்படுத்தப்பட்ட
## மூன்று திட்டங்களின் மொத்த மதிப்பு



**திட்டம் : 1**

ஈரடுக்கு கட்டில்கள் மற்றும் மெத்தைகள்

₹ 56 இலட்சம்



**திட்டம் : 2**

ஐந்து அங்கன்வாடி மையங்கள் கட்டுமானம் மற்றும் இதரபணிகள்

₹ 47.64 இலட்சம்



**திட்டம் : 3**

வெள்ள நிவாரணப் பொருட்கள் (அடுப்பு, தார்பாய்)

₹ 7 இலட்சம்

# மொத்த மதிப்பு

₹ 1.11 கோடி

புதிதாக கட்டப்பட்ட 5 குழந்தைகள் மையங்களின் **சாவிகளை** அந்தந்த அங்கன்வாடி பொறுப்பாளர்களிடம் **ஐ.வி.டி.பி. தலைவர்** அவர்கள் வழங்கினார்.









▲ நீலகிரி மாவட்ட மக்களுக்காக நிறைவேற்றப்பட்ட திட்டங்களை நீலகிரி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் 19.02.2021 அன்று நடைபெற்ற விழாவில் மாவட்ட ஆட்சியர் திருமதி. **இன்னசென்ட் திவ்யா**, இ.ஆ.ப. அவர்களிடம் ஐ.வி.டி.பி. தலைவர் திரு. **குழந்தை பிரான்சிஸ்** அவர்கள் ஒப்படைத்தார்.



# செய்தி தாள்களில்

## ஐ.வி.டி.பி.-யின் நீலகிரி மாவட்ட நலப் பணிகள்

நீலகிரி மாவட்ட குழந்தைகள் நலனுக்காக

# ₹1.11 கோடி மதிப்பில் நல உதவி

## ஐவிடிபிக்கு கலெக்டர் பாராட்டு



▶ நீலகிரி மாவட்ட குழந்தைகள் நலனுக்காக, ₹1.11 கோடி மதிப்பிலான நலத்திட்ட உதவிகள் வழங்கிய ஐவிடிபி நிறுவனர் குழந்தை பிரான்சிசை பாராட்டி, கலெக்டர் இன்னாசென்ட் திவ்யா நினைவு பரிசு வழங்கினார்.

கிருஷ்ணகிரி, பிப்.23: நீலகிரி மாவட்ட குழந்தைகள் நலனுக்காக ₹1.11 கோடி மதிப்பிலான திட்டங்களை வழங்கிய ஐவிடிபி நிறுவனத்திற்கு, அம்மாவட்ட கலெக்டர் பாராட்டி, நினைவு பரிசு வழங்கினார்.

நீலகிரி மாவட்டத்தில் மழை, வெள்ளம், நிலச்சரிவு போன்ற இயற்கை சீற்றங்களினால் பாதிக்கப்படும் குழந்தைகளின் தேவைகளை நிறைவு செய்ய, கிருஷ்ணகிரி ஐவிடிபி மகளிர் சுய உதவிக்குழு உறுப்பினர்கள் ஒவ்வொருவரும் மனமுவந்து வழங்கிய தொகை ₹1கோடியை பயன்படுத்தி, கூடலூர் ஒன்றியத்தில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட 5 அங்கன்வாடிகள் ₹47.64 லட்சத்தில் கட்டப்பட்டது. அதேபோல், குழந்தைகள் தங்கி பயிலும் விடுதிகளுக்கு ₹56 லட்சம் மதிப்பில் 380 ஈரடுக்கு கட்டில்கள், 740 மெத்தைகள் வழங்கப்பட்டது. மேலும், வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு ₹7 லட்சம் மதிப்பிலான 500 மண்ணெண்ணை அடுப்புகள் மற்றும் 500 தார்பாய்கள் வழங்கப்பட்டது.

இதையடுத்து, நீலகிரி கலெக்டர் அலுவலக கூட்டரங்கில், ஐவிடிபி நிறுவனத்திற்கு பாராட்டு விழா நடந்தது. நிகழ்ச்சியில் கலெக்டர் இன்னாசென்ட் திவ்யா பங்கேற்று, ஐவிடிபி நிறுவனத் தலைவர் குழந்தை பிரான்சிஸ்க்கு சால்வை அணிவித்து, நினைவு பரிசு வழங்கினார். விழாவில் ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்ட அலுவலர் தேவகுமாரி, குழந்தைகள் வளர்ச்சி திட்ட அலுவலர் கீதா மற்றும் அங்கன்வாடி பணியாளர்கள், ஆதிதிராவிடர் நலத்துறை அலுவலர்கள் கலந்து கொண்டனர். ...

தினகரன்
Tue, 23 February 2021
https://epaper.dinakaran.com/c/58635123

# RAMON MAGSAYSAY *Award*






**"Visionary Zeal and profound faith in community energies and his sustained programme in pursing the holistic economic empowerment of thousands of women and their families in Rural India"**

***Ramon Magsaysay Award Committee, Philippines,***
*during the presentation of Ramon Magsaysay Award to*
Mr. **KULANDAI FRANCIS**, Founder / President IVDP


## INTEGRATED VILLAGE DEVELOPMENT PROJECT

No.9E, Shanthi Nagar 3rd Cross, Krishnagiri - 635 001, Tamilnadu, India

04343-232 129, 236 420 francis@ivdpkrishnagiri.org www.ivdpkrishnagiri.org